THE

DISTRICT GEOGRAPHY SERIES

Geography

OF THE

Ramnad District

III STANDARD

C. R. Nama Sivaya



C. Coomarasawmy Naidu & Sons

OFFICE OF THE REGISTRAR 19 JUN 19.. MADRAS

638

TB
U. 21196(3)
N14
85171

இராமநாதபுரம் ஜில்லா

பூகோள புஸ்தகம்

மூன்றாம் வகுப்புப்

பூகோள புஸ்தகம்

இராமநாதபுரம் ஜில்லா

சென்னை மாதர் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்

'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய

கா. நமச்சிவாய முதலியார்

எழுதியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUN 1915
MADRAS

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரெஜிஸ்தர் செய்தது]   1914   [விலை 4 அணா

குறிப்பு

இந்தப் பூகோள புஸ்தகம் மூன்றும் வகுப்பு மாணவர்க்கு உபயோகமானது. இதனில் பூகோள சம்பந்தமான வரை யறை வாக்கியங்கள் சம்பாஷணைக் கிரமத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. நீர் நிலப் பிரிவுகள், படம் எழுதல், அளவு முதலிய விஷயங்கள் விவரமாகக் காட்டப்பட்டு இருக்கின்றன. கடைசியில் ஜில்லாவைப்பற்றிய முக்கிய விஷயங்களும் இடம் பெற்று இருக்கின்றன. மாணுக்கர்கள் இதை ஓர் இனிய கதைப் புஸ்தகமாகப் பாவித்துப் படித்து இன்பம் அடைவார்கள் என்று எண்ணுகின்றேன்.

கா. நம.

OFFICE ... MADRAS

பொருள் அடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	நகரமும் நாட்டுப்புறமும்	1
2.	வண்டிகள்	3
3.	வயல்கள்	4
4.	குளமும் ஏரியும்	6
5.	ஆறு	9
6.	மலைகள்	14
7.	வெளி, பீடபூமி, காடு	20
8.	நிலப் பரப்பு	22
9.	நீர்ப் பிரிவுகள்	27
10.	நீர்நிலப் பிரிவின் ஒற்றுமை	29
11.	திசைகள்	29
12.	நிலப்படம்	31
13.	அளவு (ஸ்கேல்)	34
14.	பாடசாலைப் படம்	38
15.	கிராம படம்	41
16.	பொது விஷயங்கள்	43
17.	இராமநாதபுரம் ஜில்லா — 1. எல்லைகள், 2. இயற்கை அமைப்பு, 3. மலைகள், 4. நதிகள், 5. விளை பொருள், 6. ஜனத்தொகை - பாஷை, 7. தாலுக்காக்கள், 8. முக்கிய பட்டணங்கள், 9. இருப்புப் பாதை, 10. அரசாக்ஷி.	46-62

பூகோள புஸ்தகம்

1. நகரமும் நாட்டுப்புறமும்

'மணீ! நீ இங்கே வந்து இரண்டு நாள் ஆகிறதே, இந்த ஊர் உனக்கு எப்படி இருக்கிறது?' என்று கேட்டான் முத்து.

'ஊர் நன்ருகத்தான் இருக்கிறது; சத்தம் அதிகமாக இல்லை; விளக்கு வைத்ததும் ஊர் அடங்கி விடுகிறது. ஆனுலும், எங்கள் ஊர் எங்கே! உங்கள் ஊர் எங்கே!' என்ருன் மணி.

'எங்கள் ஊரில் இல்லாதது உங்கள் ஊரில் என்ன விசேஷம்? சொல் பார்க்கலாம்' என்ருன் முத்து.

'விசேஷமா, வீடுகள் எல்லாம் மெத்தை வீடுகள்; வீதிகள் எல்லாம் ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருக்கும்; வண்டி என்று எடுத்துக்கொண்டால் எத்தனை விதம்! ஜட்கா வண்டி, கோச்சு வண்டி, ரிக்ஷா வண்டி, மோட்டார் வண்டி முதலிய பலவகையான வண்டிகள் உண்டு. இன்னெரு வண்டி இருக்கிறது, அதை நீ பார்த்து இருக்கமாட்டாய். அதன் பெயர் டிராம் வண்டி. அதை மாடும் இழுப்பதில்லை, குதிரையும்

இழுப்பதில்லை, மனிதனும் இழுப்பதில்லை. இரண்டு தண்டவாளக் கம்பி பூமிமேல் பதிந்திருக்கும்; அதன்மேல் வண்டி வெகு வேகமாக ஓடும். என்ன ஆச்சரியம் தெரியுமா?' என்று சொன்னான் மணி.

'தண்டவாளக் கம்பியின்மேல் ஓடுவது புகைவண்டி; அதை நான் எத்தனையோ முறை பார்த்து இருக்கிறேனே; அதில் ஏறி ஊருக்கும் போயிருக்கிறேன்; இது தெரியாதா எனக்கு!' என்று சொன்னான் முத்து.

'பார்த்தாயா, புகைவண்டி உனக்குத் தெரியும் என்று எனக்குத் தெரியாதா; புகைவண்டி யல்ல, நான் சொல்வது டிராம்வண்டி — இதற்கு நெருப்பும் இல்லை, கரியும் இல்லை. என்னோடு நீ பட்டணம் வருகிறாயே, அப்போது அதைக் காட்டுகிறேன், பார்' என்றான் மணி.

'சரிதான், உங்கள் ஊர் நகரம், எங்கள் ஊர் நாட்டுப்புறம். இரண்டுக்கும் வித்தியாசம் இல்லாமல் இருக்குமா? என்றான் முத்து.

'அப்படிச் சொல்லு, அப்படி ஒப்புக்கொள்; என் வீணை வாது செய்கிறாய்?' என்றான் மணி.

'கேவலம் அப்படிச் சொல்லிவிடாதே; உங்கள் ஊரில் இல்லாததும் எங்கள் ஊரில் உண்டு. என்னோடு வா, அவைகளைக் காட்டுகிறேன். எல்லாம் சுற்றிப் பார்த்த பிறகு சொல்' என்றான் முத்து.

'இருக்கட்டும், வருகிறேன்; எங்கள் ஊரில் உத்தியோக சாலைகளும் உத்தியோகஸ்தர்களும் இருப்பது போல உங்கள் ஊரிலும் உண்டா?' என்று கேட்டான் மணி.

'எங்களுக்கும் உத்தியோகம் உண்டு; உத்தியோகம் செய்யும் இடங்களும் உண்டு. என்னோடு வந்தால், நீயே பார்த்துத் தெரிந்து கொள்வாய், வருகிறாயா?' என்று கேட்டான் முத்து.

'வருகிறேன் வா' என்றான் மணி. இருவரும் சேர்ந்து அதிகாலையில் வயல் புறங்களுக்குப் போனார்கள்.

2. வண்டிகள்

'மணி! இதோ பார்த்தாயா எங்கள் ஊர் வண்டிகளை? இது ஒற்றைமாட்டு வண்டி; நாங்கள் ஊருக்குப் போகவேண்டுமானால், இந்த வண்டியில்தான் போவது வழக்கம். ஒரு மைல், இரண்டு மைலானால் நடந்தே போய்விடுவோம்; சில சமயம் நாலு ஐந்து மைலானாலும் நடந்துவிடுவோம். அதிக தூரம் போகவேண்டுமானால் அப்போதுதான் வண்டியைத் தேடுவோம். இந்த மாதிரி வண்டி உங்கள் ஊரிலும் இருக்கும் அல்லவா? நீங்கள் அடுத்தவீதிக்குப்போகவேண்டியிருந்தாலும் வண்டியில் போவீர்கள். எங்களுக்கு அப்படி முடியாது. இதோ இன்னொரு வண்டி வருகிறது; அது என்ன வண்டி தெரியுமா உனக்கு?' என்று கேட்டான் முத்து.

'இது தெரியாதா எனக்கு! இது வைக்கோல் வண்டி; வறட்டி வண்டி கூட பார்த்திருக்கிறேன். வைக்கோல் வண்டி, வறட்டி வண்டி இவைகளைப் பார்த்தால் நாங்கள் பரிகாசஞ் செய்வது வழக்கம். அந்த வண்டிகளை ஓட்டிக்கொண்டு வருகிறவர்களைப் பார்த்தாலும் பரிகாசஞ் செய்வோம்' என்றான் மணி.

'அப்படிச் செய்வது சரியல்ல. வைக்கோல் இல்லா-விட்டால் மாடு கன்றுகள் பிழைத்திருக்குமா? இதே பார், இந்த வீட்டை; வைக்கோல் கூரை வேய்ந்திருக்கிறது. மழைக்கும் பனிக்கும் வைக்கோல் வீடு மிகவும் வசதி-யானது. "தையும் மாசியும் வை யகத்து உறங்கு" என்பதை வாசிக்க வில்லையா? வறட்டியும் அப்படியே அடுப்பு எரிக்க அதிக உபயோகமானது. ஒரு பொருளின் உபயோகம் தெரியாமல் அதை இகழக்கூடாது. இதோ பார் இந்த வண்டியை, இது எருவை ஏற்றிக்கொண்டு போகிறது. அது போகும் இடத்திற்குத்தான் நாமும் போகிறோம்' என்றான் முத்து.

'அப்படியா, எல்லாம் மிகவும் உபயோகமானவைகளே. இனி நான் பரிகாசம் செய்யமாட்டேன்; மற்ற விஷயங்-களைச் சரியாகச் சொல்லு, நன்றாய்த் தெரிந்துகொள்ளுகி-றேன்' என்றான் மணி.

'மணி! நாம் இப்போது வீதிகளை எல்லாம் கடந்து வந்துவிட்டோம். இனிமேல் நாங்கள் உத்தியோகம் செய்யும் இடங்களைப் பார்க்கலாம்' என்றான் முத்து.

3. வயல்கள்

'இதுதானா உத்தியோகம் செய்யும் இடம்? இங்கு ஒன்றும் கட்டடம் இல்லையே! கட்டடம் இல்லாமல் காரியம் எப்படி நடக்கும்?' என்று கேட்டான் மணி

'எங்களுக்குக் கட்டடம் ஒன்றும் வேண்டியதில்லை; எங்கள் வேலை யெல்லாம் வெளியில்தான். இந்த வயல்-

களே எங்களுக்கு உத்தியோகசாலே. இதோ பார், இந்த வயல்களே. நெற்பயிர் நேர்த்தியாக வளர்ந்திருக்கின்றது. சில வயல்களில் கதிர்கள் முற்றித் தலே சாய்ந்து இருக்கின்றன. சிலர் அறுவடை செய்கிருர்கள். சிலர் கட்டுகளேக் கொண்டுவந்து களத்தில் போட்டு அடிக்கிருர்கள். நெல் விளேயும் நிலம் மேலானது. இதற்கு நன்செய் என்று பெயர். கோதுமை விளேவதும் நன்செய் நிலமே. நெல், கோதுமை தவிர மற்றத் தானியங்கள் விளேயும் நிலத்திற்குப் புன்செய் என்று பெயர். புன்செய் என்ருல் தாழ்வான நிலம்.

'நன்செய் நிலத்தைச் சேடையில் உழுவார்கள்; உழுத நிலத்தைப் பரம்படித்துச் சமப்படுத்தி, விதை விதைப்பார்கள் ; அல்லது நாற்றுவிட்டுப் பிடுங்கி நடுவார்கள். புன்செய் நிலத்தை புழுதியில் உழுது விதைப்பார்கள். நன்செய்க்கு நீராதாரம் அதிகம் வேண்டும்; புன்செய்க்கு மழைநீரே ஆதாரம். சரியான மழை இல்லாவிட்டால் கிணற்றி லிருந்தாவது குளத்தி லிருந்தாவது தண்ணீர் இறைப்பார்கள். புன்செய் நிலம் மழைநீரை எதிர் பார்ப்பதனுல் அதற்கு மானவாரி என்றும் பெயர்.

'புன்செயில் தோட்டக்கால் பயிர் என்று ஒரு பிரிவு உண்டு. அதில் பதார்த்தத்திற்கு வேண்டிய காய்கள் பயிர் இடுவார்கள். காய் கனிகளேக் கொடுக்கும் மரங்களே வைத்து வளர்க்கும் நிலத்திற்குத் தோப்புகள் என்று பெயர். தென்னந் தோப்பு, மாந் தோப்பு, புளியந் தோப்பு முதலியவை இதில் அடங்கும். அவற்றை யெல்லாம் சுற்றிக் காட்டுகிறேன் வா' என்ருன் முத்து.

4. குளமும் ஏரியும்

'மணி! நேற்று நாம் வயல்களைச் சுற்றிப் பார்த்தோமே அப்போது ஜலாதாரத்தைப் பற்றி உனக்குச் சொன்னேன் அல்லவா? அவைகளை இன்று உனக்குக் காட்டுகிறேன் வா' என்றான் முத்து.

'ஆமாம், நேற்றே அவைகளைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு விருப்பம் உண்டாயிற்று. பொழுது சாய்ந்து விட்டதென்று பேசாமல் வந்து விட்டேன். இன்று அவசியம் அவைகளைப் பார்க்கவேண்டும்' என்றான் மணி.



குளம்

'இதோ பார் ஒரு குளம். இதற்குத் திருக் குளம் என்று பெயர். சுற்றிலும் சதுரமாகக் கரைகள் ஏற்பட்டிருக்கின்றன. குளத்தில் இறங்குவதற்கு அனுகூலமாகக் கருங்கல்லால் படிகள் கட்டப்பட்டு இருக்கின்றன. குளிப்பதற்கும் துணி துவைப்பதற்கும் இந்தக் குளம் எங்களுக்கு உபயோகப்படுகிறது. இந்தத் தண்ணீரை நாங்கள் குடிப்பதற்கு உபயோகப் படுத்துவதில்லை. இன்னொரு குளம் அந்தண்டை

இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் குடிப்பதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம். அந்தக் குளத்தில் குளிப்பதும் இல்லை, துணி துவைப்பதும் இல்லை.

'வயல்களை அடுத்துச் சில சிறு குளங்கள் உண்டு. அந்தக் குளங்களுக்குச் சாதாரணமாகப் படிகள் இருப்பதில்லை. அவைகளுக்குக் குட்டைகள் என்று பெயர். அவைகளில் உள்ள தண்ணீரை வயல்களுக்கு இறைத்துக் கொள்-



ஏரி, ஆற்று நீர் ஏரியில் விழுகிறது

வார்கள். புன்செய் நிலங்களுக்குத்தான் பெரும்பாலும் இப்படி இறைப்பது வழக்கம். நன்செய் நிலங்களுக்கு வாய்க்கால் மூலமாகத் தண்ணீர் பாயும்' என்றான் முத்து.

'சரிதான், வாய்க்காலில் தண்ணீர் எப்படி வருகிறது?' என்று கேட்டான் மணி.

'அது வரும் வழியைக் காட்டுகிறேன் வா. இதோ பார் ஒரு பெரிய நீர் நிலை காண்கிறது. இது பல நூறு குளங்கள் ஒன்று சேர்ந்ததுபோல் காண்கிறதல்லவா? இதற்கு ஏரி என்று பெயர். இதில் உள்ள தண்ணீரே வயல்களுக்கு வந்து பாய்கின்றது. ஏரியில் உள்ள தண்ணீர் மதகின் வழியாக வெளியே வருகிறது. அது பல கால்வாய்களில் ஓடி வயல்களுக்குப் பாய்கின்றது. மதகில் அளவாகத் தண்ணீர் வரும்படி வழி செய்திருக்கிறார்கள். மதகில் தண்ணீர் வராமலும் அடைத்துவிடலாம்; கொஞ்சமாக வரவும் வழிவிடலாம். இப்படி யெல்லாம் செய்ய, மரப் பலகைகளை ஏற்றவாறு அமைத்திருக்கிறார்கள்.

'ஏரியில் மிதம் மிஞ்சித் தண்ணீர் வந்துவிட்டால் ஊருக்கு அபாயம் நேரிடும். அப்படி அபாயம் நேரிடாதபடி ஏரியில் அதிகமாகத் தேங்குந் தண்ணீரை விட்டுவிடவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏரியின் கோடியில் கதவுகள் அமைத்திருக்கிறார்கள். அதற்குக் கலிங்கல் (கலங்கல்) என்று பெயர். ஏரியில் தண்ணீர் அதிகமானால் அந்தக் கலிங்கலைத் திறந்து விட்டுவிடுவார்கள். அதிகமாயுள்ள ஜலம் அந்த வழியாக வழிந்து ஓடும். பெரிய ஏரிகளிலிருந்து கழிந்து ஓடும் ஜலம் ஒரு சிற்றாறாகப் பாய்ந்து, தன் கீழ் உள்ள சிறிய ஏரிகளை நிரப்பும். ஏரிகளுக்கு ஆறுகளே ஆதாரம். ஆற்றுநீர் வருத்து இல்லாவிட்டால் ஏரியில் தண்ணீர் அரிதாகிவிடும். சிறிய ஏரிகள் மழைத் தண்ணீராலும் நிறைந்து விடும். அப்படிப்பட்ட ஏரிகளினால் வயல்களுக்கு அதிக உபயோகம் இல்லை' என்று சொன்னான் முத்து.

'நாட்டுப்புறங்களில் இவ்வளவு விசேஷங்கள் இருக்கின்றனவா! இவைகளெல்லாம் இதுவரையில் எனக்குத் தெரியவே தெரியாது. இந்த விஷயங்கள் எல்லாம் உனக்கு நன்ருய்த் தெரிந்திருக்கின்றன. இன்னும் சில நாள் நான் இங்கேயே தங்கி இருக்கிறேன். இவைகளை எல்லாம் எனக்கு விவரமாகச் சொல்லு' என்ருன் மணி.

5. ஆறு

'மணீ! இன்று ஆற்றுக்குப் போகலாம் வா; இப்போது ஆற்றில் புதுவெள்ளம் வருகிறதாம். புதுவெள்ளம் வரும்போது ஆறு வெகு அழகாக இருக்கும்' என்ருன் முத்து.



ஆறு

'ஆமாம், அவசியம் போகவேண்டும். ஏரிக்கு எப்படித் தண்ணீர் வருகிறது என்று தெரிந்துகொள்ள வேண்டுமா, சீக்கிரம் போவோம் வா' என்ருன் மணி.

'இதோ பார்த்தாயா ஆறு? ஆற்றில் நிறை வெள்ளம் போகிறது. இது புதுவெள்ளம். ஆகையால் தண்ணீர் செந்நிறமாக இருக்கிறது. ஆற்றைப் பார், எவ்வளவு அழகாக இருக்கிறது! பல மரங்களையும் செடிகளையும் கொடிகளையும் வெள்ளம் அடித்துக்கொண்டு வருகின்றது' என்றான் முத்து.

'சரிதான், இது என்ன, பூமாலைகளும் பத்திரங்களும் மிதந்துகொண்டு வருகின்றனவே; கற்பூர தீபமும் இலை மேல் மிதந்து வருகிறதே' என்று கேட்டான் மணி.

'ஓகோ, அதுவா? புதுவெள்ளம் வரும்போது சிலர் நதிக்குப் பூசை போடுவது வழக்கம். அவர்கள் விடும் பூமாலையும் கற்பூர தீபமும் மிதந்துகொண்டு வருகின்றன.



அணைக்கட்டு

அது இருக்கட்டும், இதோ பார் ஒரு கால்வாய் வெட்டப் பட்டு இருக்கிறது. ஆற்று நீர் இந்தக் கால்வாய் வழியாக ஏரியில் வந்து விழும். ஆற்று நீர் நேரே ஓடிவிடாதபடி தடுத்துத் தண்ணீரைத் திருப்புவதற்காக ஓர் அணைகட்டி

இருக்கிறது பார். இந்த அணைக்கட்டு இல்லா விட்டால் ஆற்று நீர் வீணாகப் போய்விடும்.

ஆறு உற்பத்தியாகி ஓடுவது

'சில இடங்களில் ஆற்று நீரைக் கால்வாய்களில்கொண்டு போய் நேரே வயலுக்குப் பாய்ச்சிக்கொள்வ துண்டு. அந்த

நிலங்களுக்கு "ஆற்றுக் கால் பாய்ச்சல் நிலம்" என்று பெயர்' என்றான் முத்து.

'சரிதான், இந்த ஆறு எப்படி உண்டாகிறது? எங்கிருந்து வருகிறது? எங்கே போய் முடிகிறது?' என்று கேட்டான் மணி.

'ஆம், இவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியந்தான்; சொல்லுகிறேன் கேள். மழை பெய்வது உனக்குத் தெரியுமே. அந்தத் தண்ணீர் பல கால்களாக ஓடி ஒன்று சேர்ந்து ஆறாகப் பாய்கிறது. மலையை யடுத்த இடங்களில் மழை அதிகமாகப் பெய்யும். அதனால் சாதாரணமாக ஆறுகள் மலைகளிலிருந்தே தோன்றுகின்றன. ஆறு முதலில் தோன்றும் இடத்தில் ஒரு சிறு வாய்க்கால் போல் இருக்கும்; வர வர அது அகன்று ஓடும்.

'ஆறு ஓடும்போது, அங்கங்கே பல சிற்றாறுகள் வந்து பெரிய ஆற்றில் கலக்கும். அந்தச் சிற்றாறுகளுக்கு உபநதிகள் என்று பெயர். பெரிய ஆற்றிலிருந்து சில சிற்றாறுகள் பிரிந்து செல்லும்; அவைகளுக்குக் கிளை நதிகள் என்று பெயர்.

'எப்போதும் இடையறாமல் ஓடும் நதிகளுக்கு ஜீவநதிகள் என்று பெயர். நமது தேசத்தில் அநேக ஜீவ நதிகள் உண்டு. ஓர் இலையைத் தலை கீழாக வைத்து அதன் நரம்புகளின் அமைப்பைக் கவனித்தால் நதிகளின் அமைப்பு நமக்கு நன்றாக விளங்கும். ஒரு பெரிய நரம்பு இலை நடுவே நீண்டிருக்கிறது. சிறு நரம்புகள் பல அதில் சேர்ந்திருக்கின்றன. இந்தச் சிறு நரம்புகள் உபநதிகளைப்போல்

தோன்றுகின்றன. ஆறு தோன்றும்போது சிறு கால்வாய் போல ஆரம்பித்து, போகப் போக அகல்வதும் இந்த நரம்பின் அமைப்பினால் நாம் தெரிந்து கொள்ளலாம்.

நமது தேசத்தில் பெரும்பாலும் நதிகள் எல்லாம் மேற்கில் தோன்றிக் கிழக்கில் பாய்கின்றன. அதனால் ஆற்றின் கரைகளில் ஒன்று வடகரையாகவும் ஒன்று தென்கரையாகவும் அமைந்து இருக்கும். ஆற்றில் வெள்ளம் ஓடும்பாகத்திற்கு ஆற்றின் அகடு என்று பெயர். நீ அந்த அகட்டின் நடுவில் நின்றுகொண்டு கிழக்கு முகமாகப் பார்த்தால் உன் வலது கைப்புறத்தில் இருப்பது தென் கரையாம்; இடது கைப்புறத்தில் இருப்பது வட கரையாம்.



இலை

இனி, ஆறுபோய் எங்கே முடிகிறது என்பதைச் சொல்லுகிறேன். ஆறுகள் எல்லாம் முடிவில் சமுத்திரத்தை அடையும். ஆறு சமுத்திரத்தில் கலக்கும் இடத்திற்கு முகத்துவாரம் என்று பெயர். ஆறு சமுத்திரத்தில் கலக்கு முன் பல கிளைகளாகப் பிரிந்து தனித் தனியே ஓடி கடலிற் கலப்பதும் உண்டு. அப்போது அந்தப் பிரிவுகளுக்கு இடையில் திட்டுத் திட்டாக தீவுகள் ஏற்படும். அந்தத் தீவுகளுக்கு நதிமுகப் பூமி அல்லது டெல்ட்டா (Delta) என்று

பெயர். இப்படிப்பட்ட தீவுகள் மிகவும் செழிப்பானவைகளாக இருக்கும்' என்றான் முத்து.



நதிமுகப் பூமியும், தீவுகளும்



முகத்துவாரம்

'முத்து! இன்று ஆற்றைப்பற்றி அநேக விஷயங்கள் தெரிந்துகொண்டேன்; பொழுதாகிறது போகலாம் வா' என்றான் மணி.

6. மலைகள்

'மணி! இன்றைக்கு எங்கேயாவது போகலாமா? எங்கே போகலாம்? சொல்' என்றான் முத்து.

போகலாமா, எப்போது பொழுது விடியும் என்று எதிர்பார்த்திருந்தேன். நதிகள் மலையில் உற்பத்தியாகின்றன என்று சொன்னாயல்லவா? இன்று ஏதேனும் ஒரு மலையைப் பார்த்துவிட்டு வரலாம். மலையைப் பார்க்கவேண்டு-

மானல் கொஞ்சதூரம் போகவேண்டும்போல இருக்கிறது. அதற்கென்ன, ஒரு வண்டி வைத்துக்கொண்டு போகலாம்' என்றான் மணி.

[இருவரும் வண்டி ஏறி ஒரு மலை அடிவாரத்திற்குப் போனார்கள்.]

'மணீ! இதுதான் மலை; கல்லும் மண்ணும் கலந்து மிகவும் உயர்வாக இருக்கிறது. இதன்மேல் மரங்களும் புதல்களும் வளர்ந்திருக்கின்றன. இதன்மேல் ஏறுவது கஷ்டமாக இருக்கும். ஏறிப் பார்த்தால்தான் நன்றாய் விளங்கும். மலை, அடியில் அகன்று போகப்போகக் குவிந்திருக்-



மலை

கிறது. ஒருவாறு இதைக் கோபுரத்திற்கு ஒப்பிடலாம். நாம் இப்போது மலையின்மேல் வந்துவிட்டோம். மலையின் முடிவுக்கு மலை யுச்சி என்று பெயர். மலையின் மேலிருந்து அடி வரையில் பார், சரிவாகத் தோன்றுகிறது. அதற்கு

மலைச் சரிவு என்று பெயர். மலையின் அடிப் பாகத்திற்கு மலையடிவாரம் என்று சொல்வார்கள். மலையின் அடிவாரத்திலிருந்து கொஞ்சதூரம் வரையில் பூமி சற்று உயர்வாகவே இருக்கும். இதற்கு மலைச் சாரல் என்று பெயர். மலை சிறியதாக இருந்தால் அதற்குக் குன்று என்று பெயர்.

மலையைப்பற்றிய விஷயம் இம் மட்டுந்தான் என்று நினைக்காதே. இதோ பார் சில மலைகள் கும்பலாக இருக்-



மலைத் தொகுதி

கின்றன. அவற்றிற்கு மலைத் தொகுதி என்று பெயர். சிற்சில இடங்களில் மலைகள் தொகுதியாக இராமல் ஒன்றை யடுத்து ஒன்றாகத் தொடர்ந்து செல்வதும் உண்டு. அவை-

மலைத் தொடர்

களுக்கு மலைத் தொடர் என்று பெயர். இதோ பார், ஒன்றை யடுத்து ஒன்றாக இரண்டு மலைகள் காண்கின்றன. இரண்டு

மலைகளுக்கும் இடையில் பள்ளமாகத் தோன்றுகிறது. இப்படி இருக்கும் பாகம் பள்ளத்தாக்கு எனப்படும். இப்படி இரண்டு மலைகள் இணைந்திருக்கும் பாகத்தில் மனிதர்



பள்ளத்தாக்கு கணவாய்



மலைச்சாரல்

போக்குவரவு செய்யப் பாதைகள் ஏற்பட்டு இருப்பதும் உண்டு. அந்தப் பாதைக்குக் கணவாய் என்று பெயர்.



ஊற்று நிலம்

இதோ இப்படி இறங்கி வா, நன்றாய்ப் பார். தண்ணீர் சலசல வென்று பாய்கிறது. இதுதான் ஊற்று நிலம். இந்த ஊற்றுநிலத்தி லிருந்துதான் ஆறுகள் தோன்றுகின்றன. இந்த ஊற்றுநீரோடு மழைநீரும் கலந்து ஆறுகளாகப்

பாய்கின்றன. மலை உச்சியிலும் ஊற்றுகள் உண்டு. அந்த ஊற்றுகள் பெருக்கெடுத்து மலையிலிருந்து கீழே விழும். அதற்கு நீர் வீழ்ச்சி அல்லது ஆகாய கங்கை என்று பெயர்.



நீர் வீழ்ச்சி அல்லது ஆகாய கங்கை

'இதெல்லாம் ஆச்சரியமல்ல, மலையில் வேறொரு வகை இருக்கிறதாம். நான் அதைப் பார்த்ததில்லை. அவ்விதமான மலை நமது தேசத்தில் இல்லை. வேறு தேசங்களில் இருக்கிறதாம். அதைப்பற்றி நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். அந்த மலையை நினைத்தாலும் பயமாக இருக்கிறது' என்று சொல்லி நிறுத்தினான் முத்து.

'அதென்ன, நல்ல சமயத்தில் நிறுத்தி விட்டாயே. மலையைப் பார்க்கப் பார்க்க மனம் சந்தோஷம் அடைகின்றது. மலையில் வேறுவகை என்ன? அதையும் எனக்குச் சொல்' என்றான் மணி.

'சரி, சொல்லுகிறேன்; இந்த மலையைப் பார்த்தாயே. இதன்மேல் என்ன இருக்கிறது? மரமும் செடியும் புதல்களும் அடர்ந்து இருக்கின்றன அல்லவா? அந்த மலைமேல் மரஞ் செடி ஒன்றும் இராது. அதன்மேல் ஒருவரும் ஏற முடியாது; சில சமயங்களில் அதன் அடிவாரத்திலும் போக முடியாது. ஏன்? அதன் உச்சியில் எந்த நேரமும்



எரிமலை

புகைந்துகொண்டே இருக்கும். திடீரென்று அது பற்றிக்கொண்டு எரியும். பல பக்கங்களிலும் புகை கவிந்துகொள்ளும். கல்லும் கரைந்து வழியும். இரவில் பார்த்தால் ஆகாயத்தில் பெருநெருப்பு பிடித்து எரிவதுபோல் தோன்றும். இதற்கு எரிமலை என்று பெயர். இந்த நெருப்பு அந்த மலைக்கு எப்படி ஏற்பட்டிருக்கிறது? அந்த மலையின் உச்சியி-

லிருந்து பூமிக்குள் துவாரம் செல்லுகிறதாம். அந்தத் துவாரம் பூமியின் நடுவரையில் சென்று இருக்கிறது. பூமியின் நடுவில் நெருப்பு இருக்கிறதாம். அந்த நெருப்பு சில சமயங்களில் மேலெழுந்து எரிகிறதாம். அதனால்தான் அதற்கு எரிமலை என்று பெயர்' என்றான் முத்து.

'அப்படியா, கேட்டால் எனக்கும் பயமாகத்தான் இருக்கிறது. எப்படியோ உனக்கு இதெல்லாம் தெரிந்து இருக்கிறதே! ஊரைப்பற்றி மாத்திரம் உனக்குத் தெரியும் என்று நினைத்தேன், உலகத்தைப் பற்றியும் தெரிந்திருக்கிறதே. எத்தனை நாள் இருந்தாலும் எனக்குச் சலிப்பு ஏற்படாது' என்றான் மணி

7. வெளி, பீடபூமி, காடு

'இன்று எங்கே போகலாம்? வீட்டில் சும்மா இருக்க எனக்கு இஷ்டமில்லை. ஊருக்குப் போவதற்குள் இன்னும் சில விஷயங்களை உன்னிடத்தில் தெரிந்துகொள்ள இஷ்டமாக இருக்கிறது' என்றான் மணி.

'அப்படியானால் வா போவோம். இன்னும் பல இடங்களை நாம் பார்க்க வேண்டும். மணி! நாம் முதல் நாள் போனோமே, அன்று பார்த்த இடங்கள் எல்லாம் உனக்கு ஞாபகம் இருக்குமே. என்னென்ன பார்த்தோம்? சொல் பார்க்கலாம்' என்று கேட்டான் முத்து.

'ஆமாம், ஞாபகமிருக்கிறது. வயல்களும் தோப்புகளும் தோட்டங்களும் பார்த்தோம்' என்றான் மணி.

'சரிதான், இன்று இந்தப் புறம் போவோம். இதோ பார்த்தாயா இந்த இடங்களை. விஸ்தாரமாக நிலப்பரப்பு தோன்றுகிறது. இங்கே மரங்களே இல்லை. செடிகள் மாத்திரம் சில இடங்களில் காண்கின்றன. இப்படிப்பட்ட இடத்திற்கு வெளி என்று பெயர்' என்றான் முத்து.

'வெளியா, எனக்கும் தெரியும். பட்டணத்திலும் இப்படிப்பட்ட வெளிகள் உண்டு. அந்த வெளிகளில்தான் பந்தாடுவது வழக்கம். சென்னையில் கோட்டையைச் சுற்றிலும் வெளிகள் உண்டு. கவர்னர் மாளிகைக் கருகில் ஒரு பெரிய வெளி இருக்கிறது. அங்கே குதிரைப் பந்தயமும் விடுவது உண்டு. இருக்கட்டும், நீ பிறகு சொல்லு' என்றான் மணி.



பீடபூமி

'சரிதான், இன்னும் சற்றே அப்பால் போவோம் வா. இப்போது பூமி எப்படித் தெரிகிறது? உயர்வாகத் தோன்றுகிறதல்லவா? சில இடங்களில் பூமி உயர்வாகத் தோன்றும். ஆனால், மலையைப்போல் அவ்வளவு உயர்வாக இராது. பூமிமட்டத்திற்குச் சற்று உயர்ந்திருக்கும் பூபாகத்திற்குப் பீடபூமி என்று பெயர். பூமியின்மேல் பீடம் (மணை) போட்டால் எப்படியோ அப்படி யிருப்பது பீடபூமியாம்.

'இன்னும் கொஞ்சம் அப்பால் போவோம் வா. அங்கே மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. சமீபத்-

தில் போவோம். உள் நுழைந்து பார்த்தால் வெகு விநோதமாக இருக்கும். இது ஏதோ தோப்பு என்று நினையாதே. தோப்புகள் மனிதர் வைத்து வளர்ப்பவை. இந்த மரங்கள் தாமாக வளர்ந்தவை. இந்த இடத்திற்குக் காடு என்று பெயர். காட்டில் பலவகை மரங்கள் உண்டு. மரங்கள்வரிசையாக இராமல் கலந்து வளர்ந்திருக்கின்றன. மரங்களின்கீழ் செடிகளும் புதல்களும் அடர்ந்திருக்கின்றன. நரி, கோனாய், முயல் முதலிய மிருகங்கள் அங்கங்கே மறைந்து வசிக்கின்றன. மனித சஞ்சாரமில்லாத பெருங் காடுகளில் புலி, சிறுத்தை, யானை முதலிய மிருகங்கள் வசிக்கும். சில காடுகளில் சிங்கமும் வசிப்பதுண்டு. இந்தக் காடுகளில் வனவாசிகளான சில மனிதர்கள் வசிப்பார்கள். சில இடங்களில் சந்நியாசிகள் தங்கித் தவஞ்செய்து கொண்டும் இருப்பார்கள் காடுகளில் அநேக பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. காட்டையடுத்த நாடுகளில் மழையும் அதிகமாகப் பெய்யும்' என்றான் முத்து.

'ஒவ்வொன்றையும் நன்றாகச் சொல்லுகிறாய். நாளைக்கு என்ன சொல்லப் போகிறாயோ தெரியவில்லை' என்றான் மணி.

8. நிலப் பரப்பு

'மணி! இன்று எங்கேயும் போகவேண்டாம். வீட்டில் இருந்தபடியே சில விஷயங்கள் பேசுவோம்' என்றான் முத்து.

'ஆமாம், எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. தினம் வெளியில்போய் திரிந்து வருவதென்றால் கொஞ்சம்

கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஏதாவது நல்ல விஷயம் சொல்' என்று கேட்டான் மணி.

'மணி! நாம் இதுவரையில் பார்த்தவைகளில் சில நிலப் பாகமாக இருந்தன; சில நீர்ப்பாகமாக இருந்தன. பூமியில் எங்கே போனாலும் இந்த இரண்டு பாகங்களே தோன்றும். முதலில் இந்தப் பூமி எப்படி இருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு அதன் பிரிவுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

பூமி

'நாம் வசிப்பதற்கு இடமாகவுள்ள இந்தப் பூமி பார்வைக்குத் தட்டையாக இருக்கிறது. அது உண்மையில் அப்படியில்லை. பூமி ஒரு பந்தைப்போல் உருண்டை வடிவமுள்ளது' என்றான் முத்து.

'இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே! பூமி பந்தைப் போல் இருக்கிறதா? அதெப்படித் தெரியும் உனக்கு?' என்று கேட்டான் மணி.

'நீ கேட்பது நியாயந்தான்; ஒருவன் பூமியின் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு ஒரே திசையாகச் சென்றால் மறுபடியும் அவன் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருகிறான். இதனால் பூமி உருண்டை வடிவமாக இருக்கிறது என்று தெரிய



நீர் மூன்று பாகம், நிலம் ஒரு பாகம்

வருகிறது. உருண்டை வடிவமாகவுள்ள இந்தப் பூகோளத்தின் மேல்பரப்பு நிலமும் நீருமாக இருக்கின்றது. நிலம் ஒரு பாகமானால் நீர் மூன்று பாகமாக இருக்கிறது.


ஆசியா கண்டம்


சென்னை ராஜதானி
பட்டணம்

'நிலப்பிரிவை அநேக பாகங்களாகப் பிரித்து அததற்கு ஒவ்வொரு பெயரிட் டிருக்கிருர்கள். அந்தப் பிரிவுகளும் பெயர்களும் மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்டவைகளே. இப்படிப் பிரிவுகளும் பெயர்களும் இல்லாவிட்டால் எந்தக் காரியமும் நடைபெருது. இந்தக் கிராமத்திற்கு ஓர் அளவும் பெயரும் இல்லாவிட்டால் எப்படி முடியும்? ஒருவன் நம்மைப் பார்த்து, "நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்டால், என்ன பதில் சொல்வது? "பூமியின்மேல் இருக்கிருேம்"என்று சொன்ஞல் என்ன தெரியும்? எந்த இடத்தில் இருப்பதாகத் தெரிந்து கொள்வது? அதஞல் இவ்வளவு இடத்திற்கு இன்ன பெயர் என்று நம்முன்ஞேர் ஏற்படுத்தியிருக்கிருர்கள். அப்படி ஏற்படுத்திய பிரிவுகளுக்குப் பெயர்கள் உண்டு. அந்தப் பிரிவுகளைச் சொல்லுகிறேன் கேள்.

'இந்தப் பூகோளத்தில் உள்ள நிலப்பிரிவை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிருர்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் கண்டம் என்று பெயர். அவைகளில் நாம் வசிப்பது ஆசியாகண்டம். கண்டத்திற் சிறியது தேசம்; தேசத்திற் சிறியது ராஜதானி அல்லது மாகாணம்; ராஜதானியிற் சிறியது ஜில்லா; ஜில்லாவிற் சிறியது தாலூக்கா; தாலூக்காவிற் சிறியது பட்டணம் அல்லது கிராமம், மனிதரில் சிலர் பட்டணத்தில் வசிக்கிருர்கள்; சிலர் கிராமத்தில் வசிக்கிருர்கள்' என்ருன் முத்து.

9. நீர்ப் பிரிவுகள்

'நிலப் பரப்பில் பல பிரிவுகள் இருப்பது போலவே நீர்ப் பரப்பிலும் பல பிரிவுகள் உண்டோ?' என்று கேட்டான் மணி.

'ஆம், அதற்கென்ன தடை. நீர்ப்பரப்பையும் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். நீர்ப்பரப்பில் ஐந்து பெரிய பிரிவுகள் உண்டு ஒவ்வொன்றுக்கும் சமுத்திரம் என்று பெயர். சமுத்திர ஜலம் உப்பாயிருக்கும். சமுத்திரத்தில் சிறிய பாகத்திற்குக் கடல் என்று பெயர். சில படங்கள் இங்கு வரைந்து காட்டுகிறேன் பார்.

சில இடங்களில் கடல் பூமிக்குள் சென்றிருக்கும். வாய் அகன்று பூமிக்குள் சென்றிருக்கும் கடற்பிரிவுக்கு விரிகுடா என்று பெயர். வாய் குறுகிப் பூமிக்குள் சென்றிருக்கும் கடற்பிரிவுக்கு வளைகுடா என்று பெயர். இதோ பார், கடலின் நடுவில் ஒரு சிறு பூபாகம் இருக்கிறது. இதற்குத் தீவு என்று சொல்வார்கள். இது குளத்தில் இருக்கும் நீராழி மண்டபத்திற்குச் சமமாக இருக்கிறது. நீராழி மண்டபம் மனிதர் கட்டியது. தீவு தானாகவே உண்டானது. சில இடங்களில் பூமியின் மூன்று புறங்களில்மட்டும் நீர் சூழ்ந்து இருக்கும்; அதற்குப் பரியாயத் தீவு அல்லது தீபகல்பம் என்று பெயர். இதோ பார், ஒரு சிறு பூபாகம் கடலில் சென்று இருக்கிறது, இதற்கு முனை என்று பெயர்.

சில இடங்களில் ஒரு சிறு பூபாகம் இரண்டு பெரிய பூபாகங்களை ஒன்று சேர்த்து இரண்டு ஜலபாகங்களைப் பிரிக்கும்; அதற்குப் பூசந்தி என்று பெயர். இப்படியே ஒரு சிறு

ஜலபாகம் இரண்டு ஜலபாகங்களைச் சேர்த்து, இரண்டு பூபாகங்களைப் பிரிக்கும்; அதற்கு ஜலசந்தி என்று பெயர். இவைகள்தாம் நீர்ப்பரப்பிலுள்ள பெரிய பிரிவுகள்' என்று சொன்னான் முத்து.



நீர்ப்பிரிவிலுள்ள முக்கிய பாகங்கள்

'முத்து! இவற்றைக் கேட்கக் கேட்க எனக்கு அதிக ஆவல் உண்டாகிறது. இங்கு இருந்தபடியே இந்த உலகத்திலுள்ள விஷயங்களையெல்லாம் பேசி விட்டோமே. இதைவிட நமக்கு என்ன வேண்டும்!' என்றான் மணி.

10. நீர்நிலப் பிரிவின் ஒற்றுமை

கண்டம்	சமுத்திரம்
தேசம்	கடல்
தீவு	குளம் ஏரி
பரியாயத்தீவு தீபகல்பம்	வளைகுடா விரிகுடா
பூசந்தி	ஜலசந்தி

11. திசைகள்

'முத்து! முந்தாநாள் நாம் போகும் வழியில் சிலர் வேலை செய்ய நின்றிருந்தார்கள் அல்லவா? அவர்களில் ஒருவன், "சூரியன் கரகரவென்று வருகிறது; வேலைமேல் இறங்குங்கள்" என்றானே அது என்ன?' என்று கேட்டான் மணி.

'அதுவா, சொல்லுகிறேன். வழியில் நடந்தவைகளையும் நன்றாய் கவனித்திருக்கிறாய்; அதுதான் நல்லது.

'நாம் பொழுது விடிந்ததே வேலைமேல் போகிறோம்; பொழுது சாய்ந்ததும் வீடுவந்து சேருகிறோம். பொழுது விடிந்ததென்றும் பொழுது சாய்ந்ததென்றும் எப்படித் தெரிகிறது?' என்று கேட்டான் முத்து.

'இது தெரியாதா எனக்கு! சூரியன் வந்தால் பொழுது விடிந்தது என்கிறோம்; சூரியன் மறைந்தால் பொழுது போயிற்று என்கிறோம்' என்றான் மணி.

'சரிதான், நாம் சூரியனைக் காலையில் ஓரிடத்திலும் மத்தியானத்தில் ஓரிடத்திலும் மாலையில் ஓரிடத்திலும் காண்கிறோம்.



சூரியன் கிழக்கில் உதிக்கிறது

'சூரியன் காலையில் தோன்றும் திசைக்குக் கிழக்கு என்று பெயர். சூரியன் மாலையில் மறையும் திசைக்கு மேற்கு என்று பெயர். மத்தியான வேளையில் சூரியனை நமது



நான்கு திசைகள்

தலைக்குமேல் உச்சியில் பார்க்கிறோம். நீ சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்து நின்றால், உன்முகம் கிழக்குப் பக்கமாக

65171

இருக்கும்; உன் முதுகு மேற்குப் பக்கமாக இருக்கும். உன் வலதுகை தெற்குப் பக்கமாக இருக்கும்; இடதுகை வடக்குப் பக்கமாக இருக்கும்.

'நாம் எங்கே போனாலும் நான்கு திசைகளே இருக்கும். அந்தத் திசைகளுக்குக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று பெயர். நீ எங்கே போனாலும் சூரியனைப் பார்த்து நின்றால் திசைகளைத் தெரிந்து கொள்ளலாம். மாலையில் திசைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், சூரியன் மறைகிற பக்கமாக முதுகைத் திருப்பிக் கொண்டால், முன் சொன்னதுபோல் திசைகளைத் தெரிந்து கொள்ளலாம்' என்றான் முத்து.

'சரிதான் இப்போது தெரிந்து கொண்டேன்; இனி எங்கே போனாலும் திசைகளைத் தெரிந்து கொள்வேன்' என்றான் மணி.

12. நிலப்படம்

'முத்து! இன்று என்ன சொல்லப் போகிறாய்? பூமியைப் பற்றியும் பேசியாயிற்று; வானத்தைப் பற்றியும் பேசியாயிற்று; இன்னும் என்ன இருக்கிறது?' என்று கேட்டான் மணி.

'இன்னம் எவ்வளவோ விஷயம் இருக்கிறது. சொல்வதென்றால் வருஷ முழுதும் சொல்லலாம். இன்று ஒரு நூதன விஷயம் சொல்லுகிறேன் கேள்.

'நாம் அன்று வெளியே போகும்போது வீதியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களைக் கவனிக்கச் சொன்னேனே, ஞாபகம் இருக்கிறதா?' என்று கேட்டான் முத்து.

'ஆமாம், ஆமாம், ஞாபகம் இருக்கிறது? இரண்டு பெண்பிள்ளைகள் வீதியில் வீடுகட்டி விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அதைப்பற்றி என்ன?' என்று கேட்டான் மணி.

இரண்டு பெண்கள் வீடுகட்டி விளையாடுகிறார்கள்

'ஆம், சரிதான். அதைப்பற்றி ஒரு விஷயம் சொல்லுகிறேன். அது மிகவும் உபயோகமானது. அந்தப் பிள்ளைகள் வீடு கட்டி விளையாடினார்கள் அல்லவா? அதை வீடு என்று எப்படிச் சொல்வது? சுவருண்டா? கூரையுண்டா? வாசலுண்டா? கூடமுண்டா? அறையுண்டா? ஒன்றுமில்லையே. சுற்றிக் கோடுகள்மட்டும் இருந்தன. அதில் அகலம் நீளம் மாத்திரம் அறிந்துகொள்ளலாம். இதற்குத் தரைப்படம் என்று பெயர்.

‘இந்தப் பெட்டியைப் பார். இதைப்போல் நிலப் படம் எழுதவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? அந்தப் பெட்டியைத் தரையில் வைத்து அழுத்திக்கொண்டு, பெட்டியை அடுத்தாற்போல் கோடு கிழித்தபின், பெட்-



பெட்டியின் நிலப்படம்



பெட்டியின் உருவப்படம்

டியை எடுத்துவிட்டால், அங்கே அப் பெட்டியைப் போல் கோடு பதிந்திருக்கும். அதுவே பெட்டியின் நிலப்படம் ஆகும். பெட்டியைப் போலவே உயரம், பக்கம் முதலியவற்றையும் எழுதலாம். அதற்குப் பெட்டியின் உருவப் படம் என்று பெயர். அப்படியே இன்னும் சிலவற்றை எழுதுகிறேன், பார்.



ரூபாயின் நிலப்படம்

ரூபாயின் உருவப்படம்

‘இது ரூபாயின் நிலப்படம்; இது ரூபாயின் உருவப் படம். இதுபோலவே எல்லாப் பொருள்களுக்கும் நிலப் படமும் எழுதலாம், உருவப்படமும் எழுதலாம். அந்தப் பிள்ளைகள் வீதியில் கீறி விளையாடினது வீட்டின் நிலப்

படம். நீ இப்போது ஒரு புஸ்தகத்தைப்போல் நிலப் படம் எழுதவேண்டுமானால் என்ன செய்வாய்? சொல் பார்க்கலாம்' என்று கேட்டான் முத்து.

'ஓ, எனக்குத் தெரியும்; ஒரு நிமிஷத்தில் எழுதி விடுவேன். புஸ்தகத்தைப் பலகையின் மேலாவது காகிதத்தின் மேலாவது வைத்து, அழுத்திப் பிடித்துக்கொண்டு, புஸ்தகத்தைச் சுற்றிக் கோடு கிழித்தால், அதன் நிலப்படம் ஏற்-



புஸ்தகத்தின் நிலப்படம்



புஸ்தகத்தின் உருவப்படம்

பட்டுவிடும். இது புஸ்தகத்தின் நிலப்படம், பக்கத்தில் இருப்பது புஸ்தகத்தின் உருவப்படம்' என்றான் மணி.

'சரிதான், நிலப்படமும் உருவப்படமும் உனக்கு இப்போது வெகு நன்றாய்த் தெரிந்துவிட்டன. நாளைக்கு வேறொன்று சொல்லுகிறேன்' என்றான் முத்து.

13. அளவு (ஸ்கேல்)

'புஸ்தகம், ரூபாய் முதலியவற்றின் நிலப்படம் எழுத வேண்டுமானால் கடிதம் அல்லது பலகையில் எழுதிவிடலாம். வீடு முதலியவற்றின் நிலப் படத்தை அப்படி எழுத முடியுமா? ஒரு வீட்டின் அளவுக்குக் காகிதமாவது பலகையாவது அகப்படுமா?' என்று கேட்டான் மணி.

'நீ கேட்பது சரிதான்; அதைத் தெரிந்து கொள்ள வேண்டியதும் அவசியந்தான். நாம் கடைக்குப் போய் ஏதாவது ஒரு பொருளை விலைக்கு வாங்கினால், கடைக்காரன் அதை அளவிட்டுக் கொடுக்கிறான். பழம் முதலிய சில பொருள்களை எண்ணி அளவிடுகிறான்; சர்க்கரை முதலிய சில பொருள்களைப் பலம் முதலியவற்றால் நிறுத்துக் கொடுக்கிறான். அரிசி முதலிய சில பொருள்களைப் படி முதலியவற்றால் அளந்து கொடுக்கிறான்; துணி முதலியவற்றைக் கஜக் கோல் முதலியவற்றால் அளந்து கொடுக்கிறான். நாம் ஒரு வீட்டை வாங்கும் போது, "இந்த வீட்டின் அகலம் நீளம் எவ்வளவு?" என்று கேட்கிறோம். பிறகு, அது சரியாக இருக்கிறதா என்று அளந்து பார்க்கிறோம். அந்த அளவைக் கொண்டே அந்த வீட்டின் நிலப் படத்தை நாம் எழுதவேண்டும்.

'இங்கே தலையின் படங்கள் மூன்று காண்கின்றன. முதல் படத்தைப் பார்த்தால், இது சரியாக இல்லை, உருவம் அகன்று இருக்கிறது என்று சொல்லுவோம். இரண்டாம் படத்தைப் பார்த்தால், உருவம் நீண்டு இருக்கிறது என்று சொல்லுவோம். மூன்றாம் படத்தைப் பார்த்தால், உருவம் சரியாக இருக்கிறது என்று சொல்லுவோம். ஆனால், இவைகளில் ஒன்றாவது மனிதன் தலை அளவு சரியாக இருக்கவில்லை. ஒவ்வொன்றும் சரியான தலையளவுக்கு எத்தனையோ பங்கு சிறுத்து இருக்கி-

முதல் படம்

றது. அப்படி இருக்க, மூன்றும் படம் சரியாக இருக்கிறது என்று எப்படிச் சொல்லலாம்?' என்று கேட்டான் முத்து.

இரண்டாம் படம்

மூன்றும் பாடம்

'அதுவா, உருவம் சிறுத்து இருந்தாலும் ஒவ்வோர் உறுப்பும் சரியான அளவாக ஏற்பட்டிருப்பதால் அதைச் சரியான உருவம் என்று சொல்லுகிறோம்' என்றான் மணி.

'ஆமாம், சரிதான், எதையும் அளவுபோல் எழுதினோமானால் உருவம் சரியாக ஏற்படும். நாம் ஒரு வீட்டின் அளவை வெளியூரில் இருக்கும் ஒரு மனிதனுக்குத் தெரிவிக்கவேண்டுமானால் என்ன செய்வது? அந்த வீட்டின் அகலத்தையும் நீளத்தையும் அளந்து ஒரு காகிதத்தில் அந்த வீட்டின் நிலப்படத்தை எழுதி அனுப்பவேண்டும். ஒரு வீட்டின் அகலம் 60 அடி, நீளம் 100 அடி என்று வைத்துக்கொள்வோம். அதன் தரைப்படத்தை எப்படி எழுதுவது? அவ்வளவு பெரிய கடிதம் அகப்படுமா? அகப்படாதே. ஆகையால், வீட்டின் அளவைச் சுருக்கி

13. அளவு (ஸ்கேல்)





வீட்டின் நிலப்படம்.

எழுதவேண்டும். எப்படிச் சுருக்குவது 20 அடிக்கு ஒரு அங்குலம் என்று ஏற்படுத்திக்கொண்டால் இந்தக் காகிதத்தில் எழுதிவிடலாம். காகிதம் இன்னும் பெரியதாக இருந்தால், அளவை இன்னும் அதிகப்படுத்திக்கொள்ளலாம் காகிதம் இன்னும் சிறியதாக இருந்தால், அளவை இன்னும் குறைத்துக்கொள்ளவேண்டும். நாம் சொன்ன வீடு 60 அடி அகலமாகையால், 20 அடிக்கு ஒரு அங்குலமாக 3 அங்குல அகலம் வைத்துக்கொள்வோம். 100 அடி நீளமாகையால் 5 அங்குலம் நீளம் வைத்துக்கொள்வோம். இந்த அளவின்படியே படம் எழுதினல் நிலப்படம் சரியாக ஏற்படும். இதுதான் அந்த வீட்டின் நிலப்படம்' என்ருன் முத்து.

14. பாடசாலைப் படம்

'முத்து! நீ நேற்று சொன்ன விஷயம் எனக்கு அதிக சந்தோஷத்தை உண்டாக்கிற்று. இன்று என்ன சொல்லப் போகிருயோ தெரியாது' என்ருன் மணி.

'மணி! நேற்று சொன்ன விஷயத்தையே இன்னும் விளக்கமாகச் சொல்லுகிறேன். இன்று எங்கள் பாடசாலைக்குப் போவோம் வா' என்ருன் முத்து.

[இருவரும் பாடசாலைக் கட்டடத்திற்குப் போனர்கள்]

'இதுதானே உங்கள் பாடசாலை? நான் இதை முன்னமே பார்த்திருக்கிறேனே; இதைப்பற்றி இப்போது என்ன சொல்லப் போகிருய்?' என்று கேட்டான் மணி.

'இன்று இந்தப் பாடசாலையின் நிலப்படம் எழுதுவோம், ஒரு கட்டடத்தின் நிலப்படம் எழுத வேண்டுமானல், முதலில் அதன் ஆகலத்தையும் நீளத்தையும் அளந்து தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? இப்போது இந்தப் பாடசாலை இருக்கும் இடத்தை அளந்து பார்ப்போம். 120அடி நீளமும் 80அடி அகலமும் இருக்கின்றன. இந்த அளவுக்கு ஒரு நிலப் படம் எழுதுவோம். முன் செய்தது போல 20 அடிக்கு ஓர் அங்குலமாக வைத்துக் கொள்வோம். 20 அடிக்கு ஓர் அங்குலமானல் 120 அடிக்கு 6 அங்குலம் ஆகும். அதனல், 6 அங்குலம் நீளம் வைப்போம். அகலம் 80 அடி இருப்பதனல், அதற்குத் தக்கபடி 4 அங்குலம் அகலம் வைப்போம். இப்போது இந்த அளவின்படியே நிலப்படம் எழுதுவோம். படம் எழுதும்போது படத்தின் தலைப்பக்கம் வடக்காகவும் கீழ்ப்பக்கம் தெற்காகவும், இடப்பக்கம் கிழக்காகவும் வலப்பக்கம் மேற்காகவும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தக் கட்டடத்தின் தெற்குப் புறத்தின் மத்தியில் வழிவிட்டு இருக்கிறது. அந்த வழி 10 அடி அகலம் இருக்கிறது. அதற்கு ஏற்றதுபோல் நாமும் படத்தில் வழி விடவேண்டும். 20 அடிக்கு ஓர் அங்குலமாதலால் 10 அடிக்கு அரை அங்குலம் விடவேண்டும்' என்றுன் முத்து.

ஆமாம்,இந்த நிலத்தின் மத்தியில் பாடசாலைக் கட்டடம் இருக்கிறதே இதையும் எழுதவேண்டாமா?' என்று கேட்டான் மணி.

அதற்கு என்ன தடை, கட்டடத்தை எழுதாமல் விடலாமா? அதையும் அளந்து எழுதிவிடலாம். இந்தக்



பாடசாலையின் நிலப்படம்

கட்டடத்தை அளந்தால் கிழக்கு மேற்கில் அகலம் 20 அடியும் வடக்குத் தெற்கில் நீளம் 70 அடியும் இருக்-கின்றன. வடக்கே இருந்து 20 அடிக்குக் கீழ் மேற்-கில் ஓர் அறையும் கிழக்கில் ஓர் அறையும் பிரிகின்றன. ஒவ்வொன்றும் அகலம் 20 அடியும் நீளம் 20 அடியும் இருக்கின்றன. 20 அடிக்கு ஓர் அங்குலமாக அளவு எடுத்து எழுதினால் கட்டடம் ஏற்பட்டுவிடும்' என்று சொல்லி, பாடசாலைக் கட்டடத்தின் நிலப் படம் எழுதிக் காட்டினான் முத்து.

'சரிதான், இந்தக் கட்டடத்தின் உருவப் படம் எப்படி எழுதுவது?' என்று கேட்டான் மணி.

'இதோ பார், இந்தப் பாடசாலையின் உருவப் படமும் எழுதுகிறேன்' என்று பாடசாலையின் உருவப் படத்தையும் எழுதிக் காட்டினான் முத்து.

15. கிராம படம்

'மணி! இப்படியே இந்தக் கிராமத்தின் படத்தையும் எழுதி விடலாம். கொஞ்சம் கஷ்டப்பட்டு கிராமம் முழுவதையும் அளக்க வேண்டும். அதற்கு அநேக நாள் செல்லும். எங்கள் பாடசாலையில் இந்தக் கிராம படம் ஒன்று இருக்-கிறது பார். இந்தக் கிராமத்தில் உள்ள வீடுகள், வயல்கள், குளங்கள், குட்டைகள், கால்வாய்கள் முதலியவை அதில் அளவுபடிக் குறிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படியே பல கிராமங்கள் அடங்கியுள்ள தாலுக்கா, பல தாலுக்-காக்கள் அடங்கியுள்ள ஜில்லா முதலியவற்றையும் எழுதி

இருக்கிறார்கள். இந்தப் படங்களுக்குப் பூகோள சாஸ்திரப் படங்கள் என்று பெயர். ஜில்லாப் படம் எழுதும்போது கிராமங்களையும் பட்டணங்களையும் விவரமாக எழுத முடியாது. ஆகையால், கிராமம் உள்ள இடத்தில் ஒரு புள்ளி வைப்பது வழக்கம்.



கிராம படம்

படத்தைப் பார்த்தால் அநேக விஷயங்கள் தெரிந்து கொள்ளலாம். இனி, ஜில்லாவைப் பற்றிய விஷயங்களை விவரமாகச் சொல்லுகிறேன் கேள்' என்றான் மூத்து.

'அப்படியே கேட்கிறேன்; இப்படிச் சொன்னால் யார்தாம் கேட்க மாட்டார்கள்' என்று சொன்னான் மணி.

பொது விஷயங்கள்

பூமி உருண்டை வடிவமுள்ளது என்றும், பூகோளத்தில் உள்ள நீர்ப்பாகம் சமுத்திரங்க ளாகவும், நிலப்பாகம் கண்டங்க ளாகவும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன என்றும் தெரிந்து கொண்டோம். அதன் பிறகு, நீர் நிலப் பிரிவுகளி-லுள்ள சிறு பிரிவுகளையும் அறிந்து கொண்டோம். அவை யன்றி, நிலப் பிரிவில் வேறு சில உட்பிரிவுகளும் உண்டு. அவை எவையெனில், பல தேசங்கள் அடங்கியது கண்டம் என்பதனுல் கண்டத்திற் சிறியது தேசமாகிறது. தேசம் பல பிரிவுகளையுடையது; அப்பிரிவுகள் ராஜ்யங்கள் அல்-லது ராஜதானிகள் என்னப்படும். ராஜ்யம் அல்லது ராஜதானி பல பிரிவுகளை யுடையது; அவை ஜில்லாக்கள் எனப்படும். ஜில்லா பல பிரிவுகளை யுடையது; அவை தாலுக்காக்கள் எனப்படும். தாலுக்கா பல பிரிவுகளை யுடை-யது; அவை பட்டணங்கள் அல்லது கிராமங்கள் எனப்-படும். பட்டணம் அல்லது கிராமம் பல பிரிவுகளை யுடையது; அவை வீதிகள் எனப்படும். வீதி பல பிரிவுகளை யுடையது; அவை வீடுகள் எனப்படும். அவ் வீடுகளில் மனிதர்களாகிய நாம் வசிக்கிறோம்.

இவ்வாறு ஒன்றிலொன்ருகப் பிரிந்துள்ள கண்டம், தேசம், ராஜ்யம், ராஜதானி, ஜில்லா, பட்டணம், கிராமம், வீதி, வீடு ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஒவ்வொரு பெயருண்டு. அப் பெயர் ஏதாவதொரு காரணத்தினுல் அவ்வவ் விடங்களுக்கு நமது முன்னேரால் இடப்பட்ட-

தாம். மனிதரெல்லாரும் ஒரே விதமான உறுப்புக்களை யுடையவர்களாக இருந்தும், வேறுபடத் தெரிவதற்காக அவரவர்களுக்கு வெவ்வேறு பெயரிட்டு அழைப்பதுபோல இடங்களுக்கும் வெவ்வேறு பெயர்க ளில்லாவிட்டால் ஒரு-வர்க்கொருவர் இன்னின்ன இடத்தில் இருப்பதாகச் சொல்-லித் தெரிவித்துக்கொள்ள முடியாது. அதாவது, நிலப் பிரிவுக்காவது நீர்ப் பிரிவுக்காவது வெவ்வேறு பெயர்கள் இல்லாவிட்டால் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, 'உன்-னுடைய ஊர் எது?' என்று கேட்டால், அவன் அதற்குப் பதில் சொல்ல முடியாது. ஒருவாறு சொன்னாலும், அவன் சொன்ன இடத்தைக் கேட்டவன் தெரிந்துகொள்ள முடி-யாது. இதுவேயன்றி, உலகத்திலுள்ள சகல வஸ்துக்க-ளுக்கும் பெயர்கள் இல்லாவிட்டால் பாஷையே இல்லாமற் போகும். ஆகையால், உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்-களுக்கும் ஏதோ ஒரு காரணத்தினால் நம் முன்னோர் ஒவ்-வொரு பெயரிட்டு இருக்கிறார்கள். அப்பெயரையே நாமுங் கொண்டு வழங்கி வருகிறோம். ஆனால், கண்டம் முதலிய பாகங்களுக்கு ஓர் அளவு மனிதராக ஏற்படுத்திக் கொண்-டதேயன்றி கடவுளால் ஏற்படுத்தப்பட்டதன்று. இப்போது நாம் பூகோளத்தின் எந்தப் பாகத்தில் இருக்கிறோம் என்-பதை ஆராய்வோம்.

நிலப்பாகம் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்-திரேலியா, அமெரிக்கா என ஐந்து கண்டங்களாகப் பிரிக்-கப்பட்டிருக்கின்றது. அவற்றுள், நாம் வசிக்கும் கண்டம் ஆசியா. இது மற்றெல்லாக் கண்டங்களிலும் பெரியது. இந்த ஆசியா கண்டம் அநேக தேசங்களை யுடையது; அவற்றில் இந்தப் பாகம் இந்து தேசம் எனப்படும். இந்து

தேசம் பல பிரிவுகளையுடையது; அப்பிரிவுகளில் இது சென்னை ராஜதானி எனப்படும். இச் சென்னை ராஜதானி 25 ஜில்லாக்களை யுடையது. அவையாவன:—

1. கஞ்சம்
2. விசாகபட்டணம்
3. கோதாவரி
4. கிருஷ்ணா
5. குண்டூர்
6. நெல்லூர்
7. செங்கற்பட்டு
8. சென்னபட்டணம்
9. தென் ஆற்காடு
10. தஞ்சாவூர்
11. திரிசிராப்பள்ளி
12. மதுரை
13. ராமநாதபுரம்
14. திருநெல்வேலி
15. நீலகிரி
16. பல்லாரி
17. அனந்தபுரம்
18. கடப்பை
19. கர்நூல்
20. வட ஆற்காடு
21. சித்தூர்
22. சேலம்
23. கோயமுத்தூர்
24. மலையாளம்
25. தென்கன்னடம்

என்பனவாம்.

அவற்றுள் இது இராமநாதபுரம் ஜில்லா எனப்படும். இந்த இராமநாதபுரம் ஜில்லா பல தாலுக்காக்களையுடையது; அவற்றுள் இது *………… தாலுக்கா எனப்படும். இந்த தாலூக்கா பல கிராமங்களை யுடையது; அவற்றுள் நாம் வசிப்பது †………… இப் பெயர் கொண்ட கிராமம். நாம் இப்போது வசிக்கும் இக் கிராமத்தைப்பற்றியும், இக் கிராமம் அடங்கி-யுள்ள இராமநாதபுரம் ஜில்லாவைப்பற்றியும் தெரிந்து-கொள்ள வேண்டுவது அவசியம். ஆகையால், இராமநாத-புரம் ஜில்லாவைப்பற்றிய விஷயங்களை இங்கே ஆராய்-வோம்.

---

* இங்கே பாடசாலை யிருக்கும் தாலுக்காவைச் சேர்த்து வாசிக்க.

† இங்கே பாடசாலை யிருக்கும் கிராமத்தைச் சேர்த்து வாசிக்க.

இராமநாதபுரம் ஜில்லா

இராமநாதபுரம் ஜில்லா சென்னை ராஜதானியிலுள்ள 25 ஜில்லாக்களில் ஒன்று. நாம் வசிக்கும் இந்த ஜில்லாவே இராமநாதபுரம் ஜில்லா எனப்படும். இந்த ஜில்லா கடற்-கரையை அடுத்து இருக்கிறது.

1. எல்லைகள்

நாம் ஒரு வீட்டில் வசித்துக்கொண்டிருந்தால் அந்த வீட்டைச் சுற்றிலும் என்ன இருக்கிறது என்று கவ-னிக்கவேண்டியது அவசியம் அல்லவா? அதாவது நமது வீட்டிற்குக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு பக்கங்களிலும் என்ன இருக்கின்றன என்று தெரிந்து கொள்ளவேண்டும். அப்படிப் பார்க்கும்போது நமது வீட்டைச்சுற்றி வேறு வீடுகளும் வீதிகளும் இருக்கக் காண-லாம். அதுபோலவே நாம் வசிக்கும் இந்தக் கிராமத்தைச் சுற்றி வேறு சில கிராமங்கள் இருக்கும். நமது கிராமம் அடங்கி யிருக்கும் தாலுக்காவைக் கவனித்தால், அதைச் சுற்றிப் பல தாலுக்காக்கள் சூழ்ந்திருக்கும். நமது தாலுக்கா அடங்கியிருக்கும் ஜில்லாவைக் கவனித்தால் வேறு சில ஜில்லாக்கள் சூழ்ந்திருக்கும். கடற்கரையை அடுத்துள்ள ஜில்லாவானல், அதன் சில பாகத்தைக் கடல் சூழ்ந் திருக்-கும். இவ்வாறு ஓர் இடத்தை நான்கு புறமும் சூழ்ந்திருக்கும் இடங்களுக்கு எல்லைகள் என்று பெயர்.

ஒரு வீடு அல்லது கிராமத்தின் எல்லையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நேரே போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஒரு ஜில்லாவின் எல்லையை நாம் நேரே பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதிக சிரமமும் பொருள் செலவும் உண்டாகும். ஆகையால், அந்த ஜில்லாவின் படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்வது சுலபமான காரியமாகும். இந்த விதமான அனுகூலம் உண்டாக்கவே, துரைத்தனத்தார் வேண்டிய உத்தியோகஸ்தரை அமைத்து, அதிக பொருள் செலவு செய்து, படங்களை எழுதுவித்து இருக்கிறார்கள். நீ இந்த ஜில்லாவைப்பற்றிப் படிக்கும்போது படமில்லாமல் படிக்கக் கூடாது. படத்தைப் பார்த்தால், புஸ்தகம் இல்லாமலே அநேக விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். நீ படிக்கும் போது மலை, ஆறு, ஊர் முதலிய பெயர்கள்வந்தால், உடனே அவை எங்கே இருக்கின்றன என்று படத்தில் பார்; இல்லாவிட்டால் இந்தப் பாடம் உன் மனத்தில் நன்றாய்ப் பதியாது. இப்போது இராமநாதபுரம் ஜில்லா எங்கே, எந்த எல்லைக்குள் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

சென்னை ராஜதானியில் கடற்கரையை அடுத்து அநேக ஜில்லாக்கள் அமைந்து இருக்கின்றன. இராமநாதபுரம் ஜில்லாவும் கடற்கரையை அடுத்தே இருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவுக்கு வடக்கில் மதுரை திரிசிராப்பள்ளி ஜில்லாக்களும் புதுக்கோட்டை ராஜ்யமும், தெற்கில் திருநெல்வேலி ஜில்லாவும் மன்னார் குடாவும், கிழக்கில் தஞ்சாவூர்ஜில்லாவும் பாக்ஸ் ஜலசந்தியும், மேற்கில் திருவநந்தபுரமும், மதுரையும் எல்லைகளாக அமைந்திருக்கின்றன.

2. இயற்கை அமைப்பு

ஓர் இடத்தின் இயற்கை அமைப்பைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அந்த இடம் சம நிலமானதா? மேட்டு நிலமானதா? மலை யடர்ந்ததா? காடடர்ந்ததா? நீர்வள முள்ளதா? ஆகிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். இந்த விஷயங்களைப் பெரும்பாலும் படத்தைப் பார்த்தே தெரிந்துகொள்ளலாம். ஓர் இடத்தின் மேடு பள்ளத்தை எப்படித் தெரிந்துகொள்வது? பூமியில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றினால், அது தாழ்ந்த பக்கமாக ஓடும். அதனால் அந்தப் பக்கம் தாழ்வானது என்று தெரிந்துகொள்ளலாம். ஒரு ஜில்லாவின் மேடான பாகத்தையும் தாழ்வான பாகத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அந்த ஜில்லாவில் பாயும் ஆற்றின் அமைப்பைக் கவனிக்கவேண்டும். ஆறு எந்தப் பக்கமாக ஓடுகிறதோ அந்தப் பக்கம் தாழ்வானது என்று தெரிந்துகொள்ளலாம். மலையுள்ள பாகங்களையும் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளக் கூடும். படத்தில் மலைகள் கம்பளிப் பூச்சியின் உருவத்தைப்போல் வரைந்து இருக்கும். அப்படிப்பட்ட அடையாளங்களைக் கண்டால் அந்த இடம் மலை அடர்ந்தது என்று உணரவேண்டும். அப்படியே காடு அடர்ந்த இடங்களையும் தெரிந்து கொள்ளலாம். காடு அடர்ந்த இடங்களில் கிராமங்கள் இரா. மரங்களின் உருவங்கள் தோன்றும்.

இங்கே இராமநாதபுரம் ஜில்லாவின் இயற்கை அமைப்பைக் கவனிப்போம் இராமநாதபுரம் ஜில்லாவின் மேற்கில் மலை யடர்ந்து இருக்கின்றது. கடற்கரையை



Lithographed by P. Nathamuny Naidu, Purasawalkum, Madras.

யடுத்த பாகங்கள் மணற் பாங்காக இருக்கின்றன. இந்த ஜில்லா பெரும்பாலும் கரிசல் *நிலமாக இருக்கின்றது. ஆயினும் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், அருப்புக் கோட்டை யாகிய மூன்று ஜில்லாக்களில் கரிசல்பூமி அதிகம். இந்த ஜில்லாவில் பெரும்பாலும் நதிகள் எல்லாம் வட மேற்கில் தோன்றி, தென்கிழக்கில் பாய்கின்றன. அதனால் இந்த ஜில்லா வடமேற்கில் உயர்ந்து தென்கிழக்கில் தாழ்ந்து இருக்கிறது என்பது விளங்கும்.

3. மலைகள்

இந்த ஜில்லாவில் பல இடங்களில் பல குன்றுகள் காண்கின்றன. அவை யாவும் மேற்குத் தொடர்ச்சி மலை-களின் பிரிவுகளாகும். மேற்குத் தொடர்ச்சிமலை கன்னியா குமரி முனையிலிருந்து, மேல் சமுத்திரக்கரை ஓரமாக வடக்கே நெடுந்தூரம் செல்லுகிறது. அதனால் இந்த மலைத் தொடருக்கு மேற்குத் தொடர்ச்சி மலை என்று பெயர். இப்-படியே கிழக்கில் செல்லும் மலைத் தொடருக்குக் கிழக்குத் தொடர்ச்சிமலை என்று பெயர். மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெரிய மரங்களும் அரிய பொருள்களும் விருத்தியாகின்றன.

பேய்மலை — இது மேற்குத் தொடர்ச்சி மலையின் உயர்ந்த சிகரம். இது ஸ்ரீவில்லி புத்தூருக்கு மேற்கில் இருக்கிறது. கணவாய்மலை, கல்லுக்கும்மி, மொட்டைமலை, திருவண்ணமலை ஆகிய நான்கு குன்றுகளும் ஸ்ரீவில்லி புத்தூர் தாலுக்காவில் இருக்கின்றன.

4. நதிகள்

வைகை நதி — இந்த ஜில்லாவில் பாயும் நதிகளில் வைகை நதி மிகவும் பெரியது. இது வர்ஷநாடு ஆண்டிப் பட்டிமலையில் தோன்றி, மதுரை ஜில்லாவில் பாய்ந்து, இராமநாதபுரம் ஜில்லாவில் செல்லுகிறது. இதற்கு, கருளி நதி, தேனீ நதி, வராக நதி, மஞ்சள் நதி ஆகிய நான்கும் உபநதிகளாம். வைகை இந்த ஜில்லாவில் சிவகங்கை, பரமக்குடி, இராமநாதபுரம் தாலுக்காக்களின் வழியே சென்று, ஆற்றங்கரை என்னும் ஊருக்கருகில் கடலில் கலக்கிறது.

குண்டாறு — இது மதுரை ஜில்லாவில் உற்பத்தியாகி, இந்த ஜில்லாவில் பிரவேசித்து, அறுப்புக் கோட்டை, முதுகுளத்தூர் தாலுக்காக்களில் சென்று, கீழக்கரை என்னுமிடத்தில் கடலில் கலக்கிறது.

அர்ஜுன நதி — இது மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி, பல கணவாய்களை நிரப்பிக் கொண்டு ஓடி, முடிவில் வைப்பாற்றில் கலக்கிறது. காளையார்குறிச்சிக்கு அருகில் இரண்டு உபநதிகள் இதில் கலக்கின்றன.

வரிசிலையாறு — இது மதுரை ஜில்லாவின் வடகிழக்கில் உள்ள நத்தம் மலையில் தோன்றி, தென்கிழக்குமுகமாய் ஓடி-மேலூர், சிவகங்கை, இராமநாதபுரம் முதலிய பட்டணங்களில் பாய்ந்து கடலில் கலக்கிறது.

வைப்பாறு — இது மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி, ஸ்ரீவில்லி புத்தூர் தாலுக்காக்களில் பாய்ந்து திருநெல்வேலி ஜில்லாவில் பாய்கிறது.

5. விளை பொருள்

இந்த ஜில்லாவின் நிலவளம் பலவகைப்பட்டு இருக்கின்றது. பெரும்பாலும் புன்செய்த் தானியங்கள் பயிரிடப் படுகின்றன. மலைப் பிரதேசங்களில் தேக்கு, வேங்கை முதலிய விருக்ஷங்களும், தேயிலை, கடுகு முதலிய செடிகளும் பயிராகின்றன. கரிசல் நிலமான இடங்களில் பருத்தி, வரகு, சாமை முதலியவை விருத்தியாகின்றன. செவ்வல் நிலமான இடங்களில் நிலக்கடலை, துவரை, சோளம் முதலிய பயிர்கள் பயிராகின்றன. மணற் பாங்கான இடங்களிலும் நீர்ப்பாங்கான பாகங்களிலும் தென்னையும், மற்றப் பாகங்களில் பனையும் பயிராகின்றன.

6. ஜனத்தொகை - பாஷை

இராமநாதபுரம் ஜில்லாவின் ஜனத்தொகை 16,58,453. இந்த ஜில்லாவில் மறவர் அல்லது தேவர் என்றும் ஜாதியாரும் நாடார் என்றும் ஜாதியாரும் அதிகம். பெரும் பான்மையோர் இந்துக்கள். கிறிஸ்தவர்களும் மகம்மதியரும் சில இடங்களில் வசிக்கின்றனர். முக்கியமாய் இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷை தமிழ். ஆங்கில பாஷையை அனைவரும் அதிக ஆவலோடு கற்கிறார்கள்.

7. தாலுக்காக்கள்

தேசம், ராஜதானி, ஜில்லா முதலிய பிரிவுகள் மனிதர் ஏற்படுத்திக் கொண்டவை என்று முன்பு சொல்லி யிருக்கிறேன் அல்லவா? துரைத்தனத்தார் குடிகளிடம் வரி வசூல் செய்யவும் நியாய விசாரணை நடத்தவும் அனுகூலமாக இவ்விதப் பிரிவுகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த இராமநாதபுரம் ஜில்லா நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது. அவை:

1. ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா
2. சாத்தூர் தாலுக்கா
3. சிவகங்கை ஜமீன்
4. இராமநாதபுரம் ஜமீன்

என்பனவாம். இவற்றுள் இராமநாதபுரம் ஜமீன் கடற்கரையை அடுத்து இருக்கின்றது. மற்றவை உள்நாட்டில் இருக்கின்றன. மேற்கண்ட இரண்டு ஜமீன்களில் சிவகங்கை ஜமீன் மூன்று தாலுக்காக்களாகவும் இராமநாதபுரம் ஜமீன் நான்கு தாலுக்காக்களாகவும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன.

சிவகங்கை ஜமீனில் உள்ள தாலுக்காக்கள்

1. சிவகங்கை தாலுக்கா
2. திருப்புத்தூர் தாலுக்கா
3. திருவாடானைத் தாலுக்கா

இராமநாதபுரம் ஜமீனில் உள்ள தாலுக்காக்கள்

1. இராமநாதபுரம் தாலுக்கா
2. பரமக்குடித் தாலுக்கா
3. முதுகுளத்தூர் தாலுக்கா
4. அறுப்புக்கோட்டைத் தாலுக்கா

8. முக்கிய பட்டணங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா

ஸ்ரீவில்லிபுத்தூர் — இது இந்தத் தாலுக்காவின் முக்கிய பட்டணம். இங்கே ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம் இருக்கிறது. ஆடி, மார்கழி மாதங்களில் இங்கே நடக்கும் உற்சவங்களுக்குத் திரளான ஜனங்கள் வருகிறார்கள். இங்கே இரண்டு ஹைஸ்கூல்களும் ஒரு முனிசிப்புக் கோர்ட்டும் இருக்கின்றன. இந்தக் கிராமத்தின் தென்பாகத்தில் சிவன் கோயில் ஒன்று உண்டு.

நாச்சியார் கோயில் — இது ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நேர் தெற்கில் இருக்கிறது. இது ஜனம் அடர்ந்த கிராமம்.

சேற்றூர் — இது ஒரு பெரிய ஜமீன் கிராமம்.

கோல்லன் கோண்டான் — இது ஒரு சிறு ஜமீன் கிராமம்.

ராஜாபாளயம் — ராஜாக்கள் என்னும் ஜாதியார் இங்கே அதிகம். இங்கே நல்ல ஜாதி நாய்கள் உண்டு.

வத்திராப்பு — இங்கு விவசாயமும் நெசவுத் தொழிலும் அதிகம்.

நத்தம்பட்டி — இங்கே புதன்கிழமைதோறும் சந்தை கூடுகிறது. இதற்கு வடக்கில் திருமலை நாயகர் கட்டிய ஒரு மடம் இருக்கிறது.

சாத்தூர் தாலுக்கா

சாத்தூர் — இது சாத்தூர் தாலுக்காவுக்குத் தலை நகர். இதற்கு அருகில் வைப்பாறு ஓடுகிறது. இங்கே ஷெட்

அஸிஸ்டெண்ட்டு கலெக்ட்டர் வசிக்கிறார். இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன்.

விருதுபட்டி — இது சாத்தூருக்கு வடக்கேயுள்ள ரெயில்வே ஸ்டேஷன். நாடார் என்னும் ஜாதியார் இங்கு அதிகம்; அவர்கள் இங்கே ஒரு ஹைஸ்கூல் வைத்திருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் இது பெரிய வர்த்தக ஸ்தானம். பஞ்சு, புகையிலை, காப்பிக்கொட்டை, ஏலக்காய் முதலியவற்றால் அதிக வியாபாரம் நடக்கிறது.

சிவகாசி — இது சாத்தூருக்கு மேற்கில் இருக்கிறது. புகையிலை, பருத்தி வியாபாரம் அதிகம்.

திருத்தங்கால் — இங்கே ஒரு பெரிய விஷ்ணுஸ்தலம் உண்டு.

இராமநாதபுரம் ஜமீன்

(இராமநாதபுரம் தாலுக்கா)

இராமநாதபுரம் — இது இந்த ஜில்லாவுக்கு முக்கிய பட்டணம். இங்கே ஒரு பழைய கோட்டையுண்டு. இரண்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இந்த ஜமீன்தாருக்கு சேதுபதி என்னும் பட்டப் பெயர் உண்டு. இவர் தமிழ் வித்துவான்களுக்குப் பரிசு கொடுத்து, தமிழ்ப் பாஷையை ஆதரித்து வருகிறார்.

கீழைக்கரை — இது குண்டாற்றின் கரையில் இருக்கிறது. அதிக வியாபாரம் நடக்கும் துறைமுகப் பட்டணம்.

மண்டபம் — இது கடற்கரையை அடுத்து இருப்பதனால் தேக சவுக்கியத்திற்கு ஏற்ற இடமாக இருக்கிறது.

கோடைக் காலத்தில் ஜனங்கள் இவ்விடத்திற்குப் போகிறார்கள்.

பாம்பன் — இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். இது இராமேசுவரத்திற்கு மேற்கில் இருக்கிறது. கப்பலோட்டிகளுக்கு வழி காட்டுவதற்காக இங்கே ஒரு விளக்குக் கூடு உண்டு. இதற்கு அருகிலுள்ள கடலில் முத்துச் சிப்பி எடுக்கிறார்கள்.

இராமேசுவரம் — இது ஒரு தீவு. இதன் மத்தியில் ஒரு சிவாலயம் இருக்கிறது. இதில் உள்ள சிவலிங்கம் இராமர் ஸ்தாபித்துப் பூசை செய்தது என்று சொல்லுகிறார்கள். இதையடுத்து ஒரு பாறை கடலில் செல்லுகிறது; அதற்குச் சேதுபந்தனம் என்று பெயர். இங்கிலிஷ்காரர் இதை ஆடம்ஸ் பிரிட்ஜ் (Adams Bridge) என்று சொல்லுகிறார்கள். இந்தியாவின் பல பக்கங்களிலுமிருந்து ஜனங்கள் இந்த இடத்திற்கு யாத்திரை செய்கிறார்கள். சேதுபந்தனத்தைத் தொடர்ந்து இலங்கையில் உள்ள கொழும்புக்குச் செல்ல இப்போது இருப்புப்பாதை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தேவி பட்டினம் — இதற்கு நவபாஷாணம் என்றும் பெயர். இராமேசுவரத்திற்கு யாத்திரை செய்யும் மனிதர்கள் இவ்விடத்திற்கு வராமல் போவதில்லை.

தர்ப்ப சயனம்—இதற்குத் திருப்புல்லணை என்றும் பெயர். இவ்விடத்திற்கும் ஜனங்கள் யாத்திரை செய்கிறார்கள்.

பரமக்குடி தாலுக்கா

பரமக்குடி — இது இந்தத் தாலுக்காவின் முக்கிய பட்டணம். ஜில்லா முனிசிப்பு கோர்ட்டு இருக்கிறது. இங்கே

நெசவுத் தொழில் அதிகம். இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். வைகையாற்றின் கரையில் இருக்கிறது.

முதுகுளத்தூர் தாலுக்கா

முதுகுளத்தூர் — இது இந்தத் தாலுக்காவின் முக்கிய பட்டணம்.

கமுதி — இது குண்டாற்றின் கரையில் இருக்கிறது. பாளையக்காரர் காலத்தில் கட்டிய கோட்டை ஒன்று இப்போது பாழடைந்திருக்கிறது. இங்கே மீன் வியாபாரம் அதிகம்.

அறுப்புக்கோட்டைத் தாலுக்கா

அறுப்புக் கோட்டை — இது இந்தத் தாலுக்காவின் தலை நகர். இங்கே நெசவுத் தொழில் அதிகம்.

பாலவநத்தம் — இது ஒரு ஜமீன் கிராமம்.

திருச்சுழி — இங்கே பழமையான சிவாலயம் ஒன்று உண்டு.

சிவகங்கை ஜமீன்

(சிவகங்கை தாலுக்கா)

சிவகங்கை — இது இந்த ஜமீனின் முக்கிய பட்டணம். இந்த ஜமீன்தாருடைய அழகிய அரண்மனை ஒன்று உண்டு. ஒரு ஹைஸ்கூலும் ஜில்லா முனிசிப்புக் கோர்ட்டும் இருக்கின்றன. வாரந்தோறும் சந்தை கூடுகிறது.

மானமதுரை — இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன்; வைகையாற்றின் கரையில் இருக்கிறது. மண்ணால் செய்த பாத்திரங்களுக்குப் பெயர் பெற்றது.

திருப்புவனம் — இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். பழமையான சிவஸ்தலம். சிறந்த புடவைகள் நெய்யப் படுகின்றன. இவ்வூரைச் சுற்றித் தோப்புகள் மிகுதியாக இருப்பதால், கோடைக்காலத்திலும் குளிர்ச்சியாக இருக்-கிறது.

காளையார் கோயில் — இங்கே பழமையான சிவாலயம் ஒன்று இருக்கிறது. இது சிவகங்கைக்குக் கிழக்கே 10 மைல் தூரத்தில் இருக்கிறது.

வேப்பத்தூர் — மிகப் பழய காலத்தில் இங்கே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்தது. இப்போதும் இந்த ஊரில் தமிழ் படித்தவர்கள் அதிகம்.

திருப்புத்தூர் தாலுக்கா

திருப்புத்தூர் — இது இந்தத் தாலுக்காவின் தலைநகர்.

குன்றக்குடி — இங்கே சுப்பிரமணியருக்கான ஒரு சிறந்த ஆலயம் இருக்கிறது.

காணக்குடி — இங்கு அதிக வியாபாரம் நடக்கிறது. இங்கே தனிகரான நாட்டுக்கோட்டைச் செட்டிகள் அதிகம்.

திருக்கோட்டியூர் — இது ஒரு சிறந்த விஷ்ணு ஸ்தலம்.

திருவாடானைத் தாலுக்கா

திருவாடானை — இது இந்தத் தாலுக்காவின் தலைநகர்.

தேவிகோட்டை — நாட்டுக் கோட்டைச் செட்டிகள் வசிக்கும் சிறந்த நகரம்.

9. இருப்புப் பாதை

முன் காலத்தில் ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்குப் பிரயாணம் செய்ய வேண்டுமாஞல், சிலர் கால் நடையாக நடந்து போவார்கள். சிலர் மாட்டுவண்டியில் போவார்கள். சிலர் குதிரை வண்டியில் போவார்கள். சிலர் பல்லக்கில் போவார்கள். இப்பொழுதோ எங்கெங்கும் இருப்புப் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின்மேல் வண்டித் தொடர்கள் அதிக வேகமாக ஓடுகின்றன. இந்த வண்டிக்கு ரேயில் வண்டி என்று பெயர். நீயும் ரெயில் வண்டியில் ஏறி ஊருக்குப் போயிருப்பா யல்லவா? இந்த ரெயில் வண்டி எங்கிருந்து புறப்பட்டு எங்கே போகிறது என்பது உனக்குத் தெரியுமா? நான் சொல்லுகிறேன் கேள் :

நமது சென்னை ராஜதானிக்குச் சென்னபட்டணம் முக்கிய பட்டணமாக விளங்குகிறது. அங்கிருந்து மூன்று இருப்புப் பாதைகள் புறப்படுகின்றன. ஒரு பாதை மேற்கே போகிறது. ஒரு பாதை வடக்கே போகிறது. மற்ருெரு பாதை தெற்கே செல்கிறது. மேற்கே போகும் பாதைக்கு தேன் மகாராஷ்டிர இருப்புப் பாதை என்று பெயர். வடக்கே போகும் பாதை வடகிழக்கு இருப்புப் பாதை என்னப்படும். தெற்கே செல்லும் பாதைக்குத் தேன் இந்திய இருப்புப் பாதை என்று பெயர்.

இராமநாதபுரம் ஜில்லாவில் தென் இந்திய இருப்புப் பாதை செல்லுகிறது.


வெத்திலெ மண்டபம் ஸ்டேஷன்
ராமநாதபுரம் ஸ்டேஷன்
ராமநாதபுரம் தாலுக்கா

தென் இந்தியா இருப்புப் பாதை

1. விருதுபட்டி
2. சூலக்கரை
3. துலுக்கப்பட்டி
4. வேப்பிலைப்பட்டி சத்திரம்
5. சாத்தூர்
6. நல்லி

பாம்பன் கிளை

1. சிலாத்யாமன்
2. திருப்புவனம்
3. திருப்பாச்சட்டி
4. முத்தனன்டால்
5. மானாமதுரை
6. பார்த்திபனூர்
7. பரமக்குடி
8. பாண்டிகன்மாய்
9. சத்திரக்குடி
10. இராமநாதபுரம்
11. வலன்டராவை
12. ஒச்சிபல்லி
13 மண்டபம்
14. பாம்பன் பீச்
15. பாம்பன்
16. தங்கச்சிமடம்
17. இராமேசுவரம்
18. முக்குந்தராயர் சத்திரம்
19. தனுஷ் கோடி

10. அரசாட்சி

பூபாகத்தில் தேசம், ராஜதானி அல்லது மாகாணம், ஜில்லா, தாலுக்கா, கிராமம் முதலிய பிரிவுகள் துரைத்தனத்தார் ஏற்படுத்திக்கொண்டவை என்று முன்பு உனக்குச் சொல்லி யிருக்கிறேன் அல்லவா? துரைத்தனத்தார் ஏன் இந்தப் பிரிவுகளை ஏற்படுத்தினார்கள் தெரியுமா? துரைத்தனத்தார் குடிகளிடம் வரி வசூல்செய்து குடிகளுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்கிறார்கள். ஊரில் கலகம் நேரிடாமலும், கள்ளர் வந்து திருடாமலும் பாதுகாக்கப்

போலீசாரை நியமித்து இருக்கிறார்கள். பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கப் பாடசாலைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஜனங்கள் பிரயாணம் செய்ய எங்கெங்கும் பாதைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆறுகளுக்கு அங்கங்கே அணை கட்டி, தண்ணீரை ஏரிகளுக்குத் திருப்பி, வயல்களுக்குப் பாய்ச்சும்படி செய்கிறார்கள். பாலங்கள் ஏற்படுத்துகிறார்கள். ஆசுபத்திரிகள் கட்டி, நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கிறார்கள். இன்னும் அநேக நன்மைகள் செய்கிறார்கள். இவைகளுக் கெல்லாம் பணம் வேண்டுமல்லவா? அதற்காகக் குடிகளிடம் துரைத்தனத்தார் வரி வசூல் செய்கிறார்கள். இந்த வரியை வசூல் செய்வதற்காகவே தேசம், ராஜதானி, ஜில்லா முதலிய பல பிரிவுகளைத் துரைத்தனத்தார் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

நமது இந்து தேசம் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தியின் ஆளுகைக்கு உட்பட்டு இருக்கிறது. அவர் இங்கிலந்து தேசத்தில் வசிக்கிறார். அவருக்குப் பிரதிநிதியாக ஒருவர் இத் தேசத்தை அரசுசெய்கிறார். அவருக்கு வைஸிராய் என்று பெயர். இப்போது இந்தியாவுக்கு லார்ட் ஹார்டிங் மகிபர் வைஸிராயாக விளங்குகிறார். இந்தியாவின் பிரிவுகளாகிய ராஜதானிகளில் ஒவ்வொன்றும் ஒரு கவர்னர் ஆளுகைக்கு உட்பட்டு இருக்கிறது. இப்போது சென்னை ராஜதானிக்கு லார்ட் பென்ட்லண்ட் கவர்னராக இருக்கிறார். ராஜதானியிற் சிறியது ஜில்லா. ஒவ்வொரு ஜில்லாவும் ஒரு கலெக்ட்டர் ஆளுகைக்கு உட்பட்டு இருக்கிறது. கலெக்ட்டருக்கு உதவியாக சப் கலெக்ட்டர்களும், டெபுடி கலெக்ட்டர்களும் இருக்கிறார்கள். ஜில்லாவில்

சிறியது தாலுக்கா. ஒவ்வொரு தாலுக்காவும் ஒரு தாசீல்தார் அதிகாரத்துக்கு அடங்கி யிருக்கிறது. அவருக்கு உதவியாக டெபுடி தாசீல்தார், ரேவினியூ இன்ஸ்பெக்ட்டர்கள் ஏற்பட்டு இருக்கிறார்கள். தாலுக்காவில் சிறியது கிராமம். ஒவ்வொரு கிராமமும் ஒரு கிராம முனிசீப்பினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கிறது. கணக்குப் பிள்ளை, மணியக்காரர் ஆகிய இருவருடைய உதவியைக் கொண்டு கிராம முனிசீப்பு குடிகளிடம் வரி வசூல் செய்து தாலுக்கா கஜானாவுக்கு அனுப்புவார். பல தாலுக்காக்களில் வசூலாகும் வரிகளை ஜில்லா கலெக்ட்டர், ரெவினியூ போர்டார் உத்திரவின்படி, ஏற்றவாறு செலவு செய்து, நாட்டுக்கு நன்மை செய்கிறார்.

6171

PRINTED AT THE 'CAXTON PRESS', MADRAS, E — 1914.

சிறுவர்களுக்கான கதைகள்

அடியிற்கண்ட சிறு கதைப் புத்தகங்கள், இனிய செந்தமிழ் நடையில் சிறுபிள்ளைகளுக்கு மனோற்சாகத்தை யுண்டாக்கும் வண்ணம் இயன்றிருக்கின்றன. இவற்றில் எதையேனும் வாசிக்கப்புகும் சிறுவர்கள் புத்தகத்தை முடிக்கு முன்னந் திருப்தியடையார் என்பது திண்ணம். ஆரம்பத்தில் மாத்திரம் இனிமைவாய்ந்து செல்லச் செல்லப் படிப்போர்க்கு வெறுப்பை யுண்டாக்காமல் இவைகள் எளிய வகையில் நல்ல நீதிகளைப் போதிக்கும். இவை எலிமென்டரிப் பாடசாலைகளில் வீட்டுப் பாடமாக அமைப்பதற்கு மிகவும் ஏற்றவை. இப்புத்தகங்களில் கடின பதங்களும் கடின சந்திகளும் நீக்கப்பட்டிருக்கின்றன. புத்தகங்கள் தடித்த கடிதத்தில் திருத்தமாக அச்சிடப்பட்டுள்ளன.

	ரூ.	அ.	ப.
லிலிபுட் யாத்திரை	0	4	0
பஞ்சதந்திரம்	0	4	0
விவேக சந்திரிகை	0	4	0
நாற்பது திருடர் கதை	0	3	0
கதைக்கொத்து மலர் 1	0	3	0
ஷை மலர் 2	0	3	0
ஷை மலர் 3	0	3	0
ஷை மலர் 5	0	8	0
அல்லாவுதீன்	0	2	6
விக்டோரியா நல்லரசி	0	2	6
இரட்டைப் பிள்ளைகள்	0	2	0
டிக் உட்டிங்க்டன்	0	2	0
தெனாலி ராமன் கதை	0	2	0
ஆபத்தில் நேசன்	0	1	6
செங்கை வளவன்	0	1	6
ஆராயும் அங்குட்டன் கதை	0	1	6
அரிச்சந்திரன்	0	1	6
போஜராஜ குமாரன்	0	1	6

செம்படவன்	0	1	6
நல்ல பிள்ளைகள்	0	1	0
நல்ல சிநேகிதர்கள்	0	1	0
மூன்று தங்க மாம்பழங்கள்	0	1	0
மூன்று குமாரர்கள்	0	1	0
வெள்ளைப் பூனை	0	1	0
தோட்டக்காரன்	0	1	0
நான்கு பாடகர்கள்	0	1	0
நைட்டிங்கேல் அம்மையார்	0	1	0
பால நியாயாதிபதி	0	1	0
பச்சை தேவதை	0	1	0
சண்டமாருதம்	0	1	0
நடுவேனிற் கனவு	0	1	0
கடற்கரை வாஸம்	0	1	0
கூண்டுவிட்டுக் கூண்டுபாய்தல்	0	1	0
அதிசயமான கிளி	0	1	0
நாய்காட்டிய நல்லறிவு	0	1	0
தாளில்லாக் கதவு	0	1	0
அன்புள்ள சகோதரி	0	1	0
மூன்று பூதங்கள்	0	1	0
மறுபடி முயற்சி செய்	0	1	0
கோவிந்தன்	0	1	0
கம்பரும் சோழரும்	0	1	0
குசேலன்	0	1	0
புலவர் வறுமை	0	1	0
விநோதக் கூற்றுக்கள்	0	1	0
கண்ணப்பன்	0	1	0
நளன்	0	1	0
சந்த்ரஹாஸன்	0	1	0
துருவாஸரும் துரியோதனனும்	0	1	0

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
35, சின்னதம்பித் தெரு, சென்னை ஜி.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

வெளியிட்டு

துரைத்தனத்தார் அங்கீகரித்த

(நூதன) பாட புத்தகங்கள்

	ரூ.	அ.	பை.
முதல் பாட புத்தகம்	0	2	0
இரண்டாம் பாட புத்தகம்....	0	2	6
மூன்றாம் பாட புத்தகம்	0	3	0
நான்காம் பாட புத்தகம்	0	4	0
ஐந்தாம் பாட புத்தகம்	0	5	0
ஆறாம் பாட புத்தகம்	0	5	0
ஏழாம் பாட புத்தகம்	0	5	0
எட்டாம் பாட புத்தகம்	0	8	0
ஒன்பதாம் பாட புத்தகம்	0	8	0

திராவிட வாசகங்கள்

திராவிட பால பாடம்	0	1	0
முதல் திராவிட வாசகம்	0	2	0
இரண்டாம் திராவிட வாசகம்	0	2	6
மூன்றாம் திராவிட வாசகம்...	0	3	0
நான்காம் திராவிட வாசகம்	0	4	0

COMPOSITION IN TAMIL
சொற்றொடர் ஆக்கங்கள்

முதல் புத்தகம்	0	1	6
இரண்டாம் புத்தகம்	0	2	6
மூன்றாம் புத்தகம்	0	6	0

மூன்றாம் வகுப்புப் பூகோளங்கள்

சென்னபட்டணம் ஜில்லா...	0	4	0
செங்கற்பட்டு ஜில்லா	0	4	0
தென் ஆற்காடு ஜில்லா	0	4	0
கோயமுத்தூர் ஜில்லா	0	4	0
தஞ்சாவூர் ஜில்லா	0	4	0
மதுரை ஜில்லா	0	4	0

இலக்கணங்கள்

சிற்றிலக்கண வினா விடை I — 4 ஆம் வகுப்பு ...	0	1	6
சிற்றிலக்கண வினா விடை II — முதல் பாரத்திற்கு ...	0	2	0

புத்தகவியாபாரிகள், 35, சின்னதம்பித்தெரு, சென்னை.

Caxton Press, Madras.